V.V. Titanium Pigments Pvt. Ltd.,
A-81, Sipcot Industrial Complex,
South Veerapandiapuram PO,
Thoothukudi – 628002, Tamil Nadu, India

# ஊழல் தடுப்பு கொள்கை

வி.வி.டைட்டானியம் பிக்மெண்ட்ஸ் பிரைவெட் லிமிடெட் (VVTi'ன்) ஊழல் தடுப்பு கொள்கை யானது VVTi ன் நடத்தை விதிகள், ஒப்பந்தங்கள், கொள்கைகள், விதிகள் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது.

## 1.0 கொள்கை அறிக்கை

வியாபாரத்தை நேர்மையாகவும் ஒழுக்க ரீதியாகவும் நடத்துவது எங்கள் கொள்கையாகும். நாங்கள் லஞ்சம் மற்றும் ஊழல்களை சகித்துக் கொள்ளமாட்டோம். மேலும் தொழில் ரீதியான வர்த்தக நடவடிக்கைகளிலும், உறவுகளிலும், ஒருமைப்பாட்டிலும் நேர்மையாக லஞ்ச எதிர்ப்பு அணுகுமுறையை கையாளுவோம்.

இந்தக் கொள்கையானது உயரிய நெறிகள், வெளிப்படைத் தன்மை கொண்ட வியாபார நெறிகள் பெரு நிறுவனங்களின் நடை முறைகளை பின்பற்றி நிறுவனத்தைப் பாதுகாத்தல் மற்றும் வியாபாரத்தின் நன்மதிப்பைக் கட்டிக்காப்பது போன்ற விசயங்களில் VVTi மற்றும் அதன் நிர்வாகத்தின் ஈடுபாட்டை பிரதிபலிக்கிறது.

## 2.0 நோக்கம் மற்றும் குறிக்கோள்

நமது கொள்கையின் குறிக்கோள் மற்றும் எண்ணங்கள் யாதெனில்:

(i) தெளிவான கொள்கைகள் மற்றும் வழிகாட்டும் நெறிகளை வகுப்பதன் மூலம் லஞ்சம் மற்றும் ஊழலால் நமது கம்பெனி வியாபாரத்திற்கு ஏற்படவிருக்கும் ஆபத்துக்களை குறைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்வது

(ii) ஊழியர்களையும் இயக்குநர்களையும் பணியில் முனைப்புடன் செயல்படவும் நல்ல எண்ணத்துடன் கடுமையாக உழைக்கவும் ஊக்குவிப்பது.

(iii) ஊழல் பற்றிய விசயத்தில் தொடர்ந்து கவனமாக கவனிப்பது மற்றும் புலனாய்வு செய்வது

(iv) ஊழலில் ஈடுபடும் தனிநபர்களுக்கு எதிரான கடுமையான நிலையான நடவடிக்கை எடுத்தல்

(v) ஊழல் ஈடுபாடு ஆபத்திலிருந்து எல்லா ஊழியர்களையும் மற்றும் இயக்குநர்களையும் ஆபத்து தொடர்பான அபாயத்தை குறைப்பது.

(vi) VVTi தனது வணிகத்தில் லஞ்சம் மற்றும் ஊழலை முற்றிலும் எதிர்க்குமென்று தனது அனைத்து பங்குதாரர்களையும் தொடர்பு கொண்டு ஒரு பொதுவான புரிதலை ஏற்படுத்துவது.

(vii) இந்தியாவின் ஊழல் எதிர்ப்பு சட்டங்களின் முக்கிய தேவைகளை சுருக்கமாக விளக்கவும், லஞ்சம் மற்றும் ஊழல் பிரச்சனைகள் கட்டுப்பாடுகளை எவ்வாறு கண்டறிந்து கையாளுவது மற்றும் வழிகாட்டுதல்.

(viii) VVTi'ன் அனைத்து ஊழியர்களுக்கும் லஞ்சம் பற்றிய கொள்கைகளை பரப்புதல் மற்றும் VVTi'ன் ஊழியர்களுக்கு லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு சட்டங்களுக்கு இணங்குவதற்கான, பொறுப்பினை வகுப்பது.

## 3.0 யார்யாருக்கு பொருந்தும்

### இந்தக் கொள்கை யாருக்கு பொருந்தும்

1. VVTi நிறுவனத்தில் அனைத்து தொழிலாளர்கள் (ஒப்பந்த தொழிலாளர்கள் உட்பட) மற்றும் இயக்குநர்கள்.
2. மூன்றாம் நபர் உட்பட பங்குதரார்கள், நமது நிறுவனப் பிரதிநிதிகள் அல்லது VVTi சார்பாக செயல்படும் மற்ற நபர்கள், தனிநபர்கள்.

## 4.0 முக்கிய கோட்பாடுகள்

1. இந்த கொள்கை எங்கள் சட்டபூர்வ ஒழுக்க நெறிமுறைகளுடன் இணங்குகிறது. மேலும், எங்கள் கட்டுப்பாட்டின் கீழுள்ள அனைவரும் இந்த கொள்கையுடன் இணக்கமாக இருப்பதை உறுதி செய்வதற்கான முழு பொறுப்பையும் இயக்குநர்குழு கொண்டுள்ளது. இயக்குநர், GM – Operations மற்றும் VVTi'ன் மூத்த மேலாளர்கள் ஆகியோர் உதாரணமாக இருந்து அவர்களை சார்ந்து பணி புரிபவர்களுக்கு இந்த கொள்கையை பற்றிய விழிப்புணர்வையும் புரிதலையும் கொண்டிருக்கிறார்கள் என்று உறுதிபடுத்துவது அவர்களின் பொறுப்பாகும்.

VVTi

2. VVTi வெளிப்படையாக லஞ்சம் ஊழலுக்கு தனது எதிர்ப்பை தெரிவிக்கிறதுஎல்லா ஒப்பந்தக்காரர்கள், தொழிலாளர்கள், ஆலோசர்களும் மற்றும் சம்பந்தப்பட்ட கட்சிகளும் / நிறுவனங்களும் மற்றும் கூட்டாளிகளும், மேலாளர்களும் கம்பெனியோடு இணைந்து பணியாற்றும் நபர்கள், மேலாண்மை அதிகாரிகள் குழு மற்றைய நபர்கள் அனைவரும் இந்த கொள்கையின் மதித்து நடப்பதை ஊக்குவிக்கவும் வரவேற்கவும் செய்கிறது.

**5.0 ஊழல் தடுப்புச்சட்டங்களின் முக்கிய பிரிவுகள்**

இந்தியாவின் சட்ட ஆளுகைக்குள் செய்லபடுத்தப்படும் ஊழல் தடுப்பு சட்டங்கள் பின்வருமாறு

1. இந்திய தண்டனைச் சட்டம் 1860
2. ஊழல் தடுப்புச் சட்டம் 1988
3. மணி லாண்டரிங் தடுப்புச் சட்டம் 2002
4. தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005
5. மத்திய ஊழல் தடுப்பு ஆணைய சட்டம்
6. மாவட்டங்களில் செயல்படும் லோக் அயுக்தா
7. இந்திய அரசால் அவ்வப்போது அமல்படுத்தப்படும் மற்ற சட்டங்கள்

இந்தியா, இங்கிலாந்து மற்றும் மற்ற நாடுகளின் “ஊழலில் ஈடுபடுவது” என்பதாவது – லஞ்சம் கொடுப்பது அல்லது வாங்குவது, லஞ்சம் கொடுப்பது மற்றும் வாங்குவதற்கு இடைத்தரகராக செயல்படுவது, தவறான நடவடிக்கை, அதிகாரத்தை தவாறக பயன்படுத்துவது, லஞ்சத்தை வியாபாரமாக்கி செயல்படுவது, பணம் கொடுப்பதற்கு வசதி செய்து கொடுப்பது, பணமாகவோ, சொத்தாகவோ அல்லது வேறு சொத்துகளாகவே, சேவையாகவோ நன்மைகளைப் பெறுவதற்கு அலுவலக பதவியை சட்டவிரோதமாக செயல்படுத்துவது, மற்றும் தனக்கோ அல்லது மற்றவர்களுக்கோ உரிமையைப் பெறுவது அல்லது மற்றவர்கள் சட்டவிரோதமாக நன்மைகளை பெறுவது.

மேற்கண்டபடி, VVTi ஊழியர்கள் அனைவரும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, தானாகவோ அல்லது மூன்றாம் நபர் தரகர்கள் மூலமாகவோ ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதோ, நிர்வாக அலுவலக விதிகளை சுருக்கவோ பணமோ, வெகுமதியான பொருட்களோ, சேவையோ நன்மைகளோ கொடுப்பதோ அல்லது மற்ற நபர்களிடமிருந்தோ அல்லது அலுவலகங்களிருந்தோ அரசிடமிருந்தோ

அல்லது அரசு உள்ளாட்சி அதிகாரிகளிடமிருந்தோ, அரசு அதிகாரிகளிடமிருந்தோ, தனியார் நிறுவனங்களிலிருந்தோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளிடமிருந்தோ ஒப்புக்கொள்வதோ, கொடுப்பதோ, உறுதிமொழிகொடுப்பதோ, வேண்டிக் கேட்பதோ, பணம் வாங்குவதோ அல்லது பணம் கொடுப்பதோ கண்டிப்பாக தடைசெய்யப்படுகிறார்கள்.

## 6.0 தடைசெய்யப்பட்ட அல்லது வறையரைப்படுத்தப்பட்ட செயல்பாடுகள்

பாலிசியின் மூலம் தடைசெய்யப்பட்ட அல்லது வறையரைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் பற்றி சில உதாரணங்கள் கீழே தரப்பப்பட்டுள்ளது.

1. பணத்தையோ அல்லது பொருளையோ கெட்ட எண்ணத்துடன் மோசடியாக பெறுவது
2. குற்றமுரு நம்பிக்கை மோசடி
3. ஏமாற்றுவது
4. லஞ்சம் கொடுப்பது அல்லது வாங்குவது
5. கீழே கண்டுள்ளவாறு அளவுக்கு அதிகமாக நன்கொடைகளை ஏற்பது அல்லது கொடுப்பது:

I. அன்பளிப்போ அல்லது பிரதிநதிகளுக்கு செலவு, வியாபார நிமித்தம் மரியாதைவரவேற்பு செலவு உட்பட ஒரு ஊழியர் கம்பெனிக்காக ஒரு நபருக்கு அல்லது நிர்வாகத்துக்கு செய்வது அல்லது ஊழியர்கள் கம்பெனியில் தமது வேலைக்காக மற்றவர்களிடமிருந்தோ அல்லது மற்ற நிறுவனங்களிடமிருந்தோ வாங்குவது இவைகள் கீழ்க்கண்ட ஐந்து வரையறைக்குட்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

a) கம்பெனியின் நியாயமான நடவடிக்கையில் நேரடியாக தொடர்புடையவை: உதாரணமாக ஒரு சொற்பொழிவு அல்லது வியாபார திட்டங்களை நிறைவேற்றுவது அல்லது வெற்றிகரமாக ஒப்பந்தத்தை நிரைவேற்றி முடிப்பது அல்லது பொது விடுமுறை அதாவது கிறிஸ்துமஸ், தீபாவளி, புத்தாண்டு, சர்வதேச மகளிர் நாள், ஆண்டுவிழாக்கள், பிறந்தநாள் விழாக்கள்.

b) நியாயமாக இருப்பது, ஏற்றவாறு இருப்பது ஆடம்பரமாக இல்லாதிருப்பது

c) சேவைக்காக, நடவடிக்கைக்காக, தவிர்ப்பதற்காக முறைமுகமாக வழங்கப்படாத பணம், கூட்டுசேர்ந்து சதிசெய்வது, பாதுகாப்பது சில முக்கிய முடிவெடுப்பது, ஒப்பந்தம் போடுவது, அனுமதி வழங்குவது, அனுமதிப்பது

அல்லது பணம் வாங்குவதை சட்டவிரோதமாகவும் நியாயத்திற்கு எதிராகவும் செயல்பட எந்த நபரையும் தூண்டுவது

d) அன்பளிப்பு மற்றும் பிரதிநிதி செலவுகள் பற்றிய தகவல்களை வெளியே சொல்வதன் மூலம் கம்பெனிக்கோ, ஊழியர்களுக்கோ மற்ற நபர்களுக்கோ அவர்களின் நற்பெயருக்கு களங்கம் விளைவிப்பது

e) கொள்கைக்கோ, நடத்தை விதிகளுக்கோ, கம்பெனியின் உள்விவகாரம் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் விதிகள் மற்றும் சட்டங்கள் மீதோ எப்போதும் விரோதமாக இல்லாதிருத்தல்

II. கம்பெனி சார்பாக அதன் ஊழியர்களுக்கு மற்றும் மூன்றாம் நபர்களின் பிரதிநிதிகளுக்கு அன்பளிப்பு கொடுப்பது கம்பெனியின் அன்பளிப்பு கொள்கை விதிகளுக்குட்பட்டது.

6. வர்த்தக ரீதியாக பயன்களைப் பெறுவதற்காக தருமம் செய்வது

7. அரசியல் நடவடிக்கைகளில் பங்கெடுப்பது மற்றும் பங்களிப்பை கொடுப்பது

8. வர்த்தக ரீதியாக பயன்பெறும் பொருட்டு அரசு அதிகாரிகளுக்கோ அல்லது அவர்களின் உறவினர்களுக்கோ (அல்லது அவர்களின் நன்மைக்காக) பணம் கொடுப்பது

9. மற்ற நெறிமுறணாண செயல் மற்றும் தவிர்த்தல்

ஊழல் தடுப்பு சட்டங்களுக்கோ அல்லது கொள்கையின் தேவைக்கோ அல்லது விதிகளுக்கு விரோதமாக பங்குதாரர்களையோ, ஏஜென்ட்களையோ, இணைந்து செயல்படும் நிறுவனங்களையோ, புரோக்கர்களையோ அல்லது வேறு நபர்களையோ உபயோகிப்பது

## 7.0 நடைமுறைப்படுத்துதல் மற்றும் இணங்குதல்

இக்கொள்கையை நடைமுறைப்படுத்துவது என்பது VVTi இயக்குநர்/ பொது மேலாளர் – ஆப்பரேசன் அவர்களின் உத்தரவால் செய்யப்படும். எல்லா ஊழியர்களும் (இந்தக் கொள்கைக்குட்பட்ட அனைத்து அதிகாரிகள்) கொள்கையை மதித்து நடப்பதோடு இந்தக் கொள்கைக்குள் தனது நடவடிக்கைகளை / நடத்தைகளை நடத்திக் கொள்ள வேண்டியது அவர்களின் கடமையாகும்

ஊழியர்கள் இந்த பாலிசியின் கொள்கைகள் மற்றும் தேவைகளைப் இணக்கமாக செய்வது அவர்களின் செயல்திறன் மற்றும் உத்தியோக உயர்வு மதிப்பீடு செய்யப்படும்போது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

## 8.0 அறிக்கை மற்றும் நடவடிக்கைகள்

இக்கொள்கைகளை மீறுவது மற்றும் கொள்கைகளை பின்பற்றாமல் நடப்பது அந்தந்த அதிகாரிகள் மட்டத்தில் செயலபடும் ஒழுங்குநடவடிக்கை குழுவுக்கு தெரிவிக்கப்பட்டு அந்த குழு தேவையான நடவடிக்கை எடுக்கும்.

இந்தக் கொள்கைக்கு உட்பட்ட ஏதாவது ஒரு ஊழியர் அல்லது நபர் ஊழல் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக காணப்பட்டால் அல்லது கொள்கையை மீறி செயல்படுவரேயானால் அல்லது ஏதாவது பொய்ப்புகார் கொடுப்பாரேயானால் அவர் மீது ஒழுங்க நடவடிக்கையோ வேலையிலிருந்து நிரந்தரமாக நீக்கப்படுவதோ அல்லது நிர்வாக ரீதியான அல்லது கொள்கையில் சொல்லப்பட்டுள்ள பொருத்தமாக சட்டப்படி குற்றவியல் உரிமையியல் நடவடிக்கைகளோ எடுக்கப்படும்.

அதிகாரிகள் மட்டத்திலான ஒழுங்கு நடவடிக்கைக் குழுவானது குறிப்பிட்ட காலவரை அடிப்படையில் கொள்கை மீறல் சம்மந்தமாக அறிக்கையை Corporate Conduct & Ethics Committee க்கு அனுப்பும் மேலும் அடுத்தடுத்த கூட்டங்களில் அந்த அறிக்கையை மறுபரீசீலணையும் செய்யும்.

## 9.0 விதிமீறல் சம்மந்தமான அறிக்கை சமர்ப்பிக்கும் வழிமுறை

### I. ஊழியர்கள், அதிகாரிகள், மற்ற நபர்களுக்கு எதிராக அறிக்கை விடுதல் (பங்குதாரர்கள், பிரதிநிதிகள் உட்பட)

ஏதாவது ஊழியர்களோ அல்லது மற்ற நபர்களோ, தங்கள் நடவடிக்கையின் மீது சட்டபூர்வமான நடவடிக்கையில் ஏதாவது சந்தேகம் ஏற்படுமானாலோ அல்லது VVTi சார்பாக செயல்படும் மற்ற ஊழியர்கள், ஒப்பந்தக்காரர்கள், நபர்கள் நடவடிக்கையில், செயல்படாதன்மை, விதிமீறல் ஆகியவற்றில் குறைபாடு காணப்பட்டால் அதுபற்றி அவர்கள் கீழக்கண்ட முறைப்படி அறிவிக்கலாம்.

a) இமெயில்: personnel@vvtipigments.com

b) தொலைபேசி: 0461-2340491 and +91-9894021336

c) புகார் தெரிவிப்பது: பொது மேலாளர் - Operation மற்றும் அந்தந்த ஊழியரின் துறைத்தலைவர்

பொதுமேலாளர் - Operations / துறைத்தலைவர் அந்த விதிமீறல்களை பற்றி அந்தந்த அதிகாரிகள் மட்ட ஒழுங்குநடவடிக்கைக் குழுவிடம் தெரிவிப்பார்.

## II. இயக்கநர்குழு உறுப்பினர் மீது புகார் தெரிவிப்பது

ஒருவேளை இயக்குநர்குழு உறுப்பினரோ அல்லது உறுப்பினர்களோ ஊழலில் ஈடுபடுவாரேயானால், அதுபற்றி இயக்குநர் அல்லது மற்றும் இயக்குநர் குழவின் பெருந்தலைவரிடம் தெரிவிக்கவேண்டும். மேலும் அதுபற்றி இன்னது சரியெனக் கருதும் நடவடிக்கையை அவர் எடுப்பார்.
விதிமீறல்கள் பற்றி தெரிவிக்கும் நபர்களைப்பற்றிய தகவல்களை பாதுகாப்பாக வைத்திருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது போதுமேலாளர் ஒவ்வொரு துறைத்தலைவரின் கடமையாகும். மேலும் அதுபோன்ற தகவல்களை அதாவது அறிக்கையின் போதோ அல்லது புலனாய்வின் போதோ தன்னிடம் கிடைக்கப்பெறும் தகவல்களை பாதுகாப்பாக வைத்திருக்க தேவையான நடவடிக்கைகளை எடுப்பதும் அவரின் பொறுப்பு ஆகும். அந்த தகவல்களை எதற்காக கொடுக்கப்பட்டதோ அதற்கு மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும் அதனை சட்டப்படியான தேவைகளை பூர்த்திசெய்வது தவிர்த்து வேறு மூன்றாம் நபர்களிடம் பகிர்ந்து கொள்ளக் கூடாது.

## 10.0 கொள்கை செயல்படாத்தன்மை (ஒழுங்காக நிவர்த்திசெய்யாததால்) பொறுப்பு

இயக்குநர்கள்குழு உறுப்பினர்கள், பொது மேலாளர் – ஆப்பரேசன், நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள், மற்றும் VVTi சம்மந்தப்பட்ட ஊழியர்கள் அனைவரும், அவர்களின் நிலை, பதவியின் பெயர் முதலியவைகளை கருத்தில் கொள்ளாமல், ஒவ்வொருவரும் அவர்களின் தனிப்பட்ட நிலையில் கொள்கையின் கோட்பாட்டையும் தேவையையும் பூர்த்தி செய்யக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என்பதோடு கொள்கையில் கோட்பாட்டையும் தேவையையும் மீறும் அவர்களின் கீழ் பணிபுரிபவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமைக்கும் அவர்கள் பொறுப்பாவார்கள்.

## 11.0 பயிற்சி மற்றும் தகவல் தொடர்பு

எல்லா ஊழியர்களும் கொள்கை செயல்படுத்தும்முறை மற்றும் கடைப்பிடித்தல் பற்றி தேவையான பயிற்சியை முறையாக பெறுவது அவசியம்

VVTi நிறுவனத்தின் முற்றிலும் லஞ்சம் மற்றும் ஊழல் சகிப்பின்மை என்ற நிலைப்பாட்டை எல்லா சப்ளையர்களுக்கும், ஒப்பந்தக்காரர்களுக்கும், ஏஜென்சிகளுக்கும், வியாபார மற்றும் மற்றவகை பங்குதாரர்களுக்கும் முதன் முதலிலும் பின்னர் தேவைப்படும் நேரத்திலும் தெரியப்படுத்தவேண்டும்

## 12.0 மாற்றம்

இந்தப் கொள்கையில் ஏதாவது ஒரு விதி தேவைப்படாமல் இருக்குமேயானால் அல்லது தேவைப்படும் சட்டத்தில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் அல்லது இயக்குநரோ அல்லது பொது மேலாளர் - ஆப்பரேசன் அவர்கள் ஏதாவது மாற்றம் செய்யப்படவேண்டுமென்று கருதினாலோ, இயக்குநர் / பொது மேலாளர்-ஆப்பரேசன் ஆகியோர்கள் இந்தக் கொள்கையில் தங்கள் கையொப்பமிட் உத்தரவின் பேரில் மாற்றம் செய்ய முடியும்.

VVTi